**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**எம்,சி. ஓ,.பி. எண். 246 /2023**

**ம.சா. 1**

நாள்: 18.06.2026 .

2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 18 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் BSA சட்டத்தின் படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணபாண்டி | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

<u>முதன்மை விசாரணை:</u>

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

<u>1 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

விபத்து நடந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நேரடியாக தெரியும். விபத்து நடந்த சாலை இராமநாதபுரத்தில் அண்ணா சிலையில் இருந்து புதிய பேருந்து நிலையம் செல்லும் சாலை என்றால் சரிதான். அந்த சாலை அதிகமான மக்கள் மற்றும் வாகனங்களின் போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். மேற்படி சாலை வளைந்து உள்ளது என்றால் சற்று வளைந்து உள்ளது. வளைவான சாலையில் அரசு பேருந்து மெதுவாக



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.06.18 18:12:08 +0530

தான் வரும் என்றும், இறந்து போன நபர் தான் வாகனத்தை வேகமாக ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. நின்று கொண்டிருந்தவர் மீது பேருந்து மோதியது. இறந்த நபரும் நானும் ஒரே ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டி வந்தோம் என்பதால் மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2 ,3 எதிர்மனுதார்கள் தரப்பு குறுக்கு விசாரணை

2, 3 எதிர்மனுதாரர்கள் ஆஜர் இல்லை. வழக்கறிஞர்களும் ஆஜர் இல்லை. எனவே குறுக்கு விசாரரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.18 18:12:11 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .